செய்திப் பணிப்பாளர் /செய்திஆசிரியர் 21.05.2019

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : ஏப்றல் 2019


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2019 ஏப்றல் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு, புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம், தே.நு.வி.சு. அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 3.6% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2019 மார்ச் மாதம் பொருட்டு பதிவாகிய வருடத்தின் மீது வருட பணவீக்கம் 2.9% ஆக இருந்தது. 2019 ஏப்றல் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே -0.5%, 4.1% ஆக இருந்த அதேவேளை, 1.6% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2018 ஏப்றல் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதுமான பங்களிப்புகள் முறையே -0.1%, 1.7% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2019 மார்ச் மாதத்தில் பதிவாகிய 126.4 இருந்து 2019 ஏப்றல் மாதத்தில் 127.3 ஆக அதிகரித்துள்ளது. இது, 2019 மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 ஏப்றல் மாதத்தில் 0.9 சுட்டெண் புள்ளி அதாவது 0.7 சதவீதப்புள்ளி அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.39% இனாலும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.35% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் மரக்கறி, பால் மா, உருளைக்கிழங்கு, புதிய மீன், எலுமிச்சம்பழம், பெரிய வெங்காயம், வாழைப்பழம், முட்டை, கோழி இறைச்சி, தேங்காய் எண்ணெய் மற்றும் நெத்தலிக் கருவாடு என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் குறைந்த செலவுப் பெறுமதிகள் பப்பாசிப்பழம், அரிசி, பச்சை மிளகாய், வெள்ளைப்பூடு மற்றும் தேங்காய் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2019 ஏப்றல் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கு காரணம், 'அற்ககோல் பானங்கள், புகையிலை ரூ தியக்கமருந்துகள்'(வெற்றிலை, சிகரட்டுகள், பாக்கு மற்றும் சாராயம்), 'போக்குவரத்து' (வாகனக் கொள்வனவு, எரிபொருள் விலைகள் மற்றும் விமானக் கட்டணங்கள்), 'நானாவிதப் பொருட்களும் சேவைகளும்', 'ஆடையும் காலணியும்', 'சுகாதாரம்'(மருத்துவ ஆய்வுகூட பரிசோதனைகளுக்கான கொடுப்பனவுகள்) அத்துடன் 'தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு' ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதிகளின் அதிகரிப்பேயாகும். மேலும், 'பொழுதுபோக்கும் கலாசாரமும்' மற்றும் 'தொடர்பாடல்' ஆகிய பிரிவுகள் பொருட்டு செலவுப் பெறுமதிகளில் ஓரளவு சற்று அதிகரிப்புக்கள் பதிவாகின. அதேநேரம், 'வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு ஏனைய எரிபொருள்கள்', 'கல்வி' மற்றும் 'உணவகமும் ஹோட்டல்களும்' போன்ற பிரிவுகளின் செலவுப் பெறுமதிகள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.




## தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | வருடத்தின் மீது வருட பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2018** | ஏப்ரல் | 122.9 | 0.1 | 1.6 |
| | மே | 124.3 | 1.1 | 2.1 |
| | யூன் | 126.5 | 1.8 | 2.5 |
| | யூலை | 126.6 | 0.1 | 3.4 |
| | ஓகஸ்ட் | 125.4 | -0.9 | 2.5 |
| | செப்ரெம்பர் | 124.4 | -0.8 | 0.9 |
| | ஒக்ரோபர் | 124.9 | 0.4 | 0.1 |
| | நவம்பர் | 127.7 | 2.2 | 1 |
| | டிசம்பர் | 127.1 | -0.5 | 0.4 |
| **2019** | ஜனவரி | 127.3 | 0.2 | 1.2 |
| | பெப்ரவரி | 126.7 | -0.5 | 2.4 |
| | மார்ச் | 126.4 | -0.2 | 2.9 |
| | ஏப்ரல் | 127.3 | 0.7 | 3.6 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்